**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.20/2024 |
| Deposition of Witness for | : PW – 8 |
| Name and Age | : பாலசுப்பிரமணியம் (வயது 43) |
| Father / Husband Name | : சின்னசாமி |
| Occupation | : முதுநிலை உதவி மருத்துவர் |
| Village | : பாலக்கோடு அரசு மருத்துவமனை |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 09.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 to A3 absent. Petition U/s.355 of BNSS filed and allowed.**

**PW– 8**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பாலக்கோடு அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணி செய்து வருகிறேன். இதே மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி செய்த மருத்துவர் பிரபு மருத்துவ கட்டாய பணிக்காலம் முடிந்துவிட்டதால் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் பணியில் இருந்து விலகிவிட்டார். அவர் வழங்கிய காயச்சான்றிதழ் ஆவணப் படியும், நான் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலர் என்பதாலும், காயச்சான்று ஆவணங்கள் எனது மேற்பார்வையில் இருப்பதாலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.09.2023–ம் தேதி மதியம் 01.30 மணியளவில் அவர்கள் பணியில் இருந்தபோது 35 வயது மதிக்கத்தக்க ராஜிவ்காந்தி, த/பெ. முருகன் சிகிச்சைக்காக வந்தவரை விசாரித்தபோது தெரிந்த மூன்று நபர்களாலும் அதே நாளன்று 11.20 மணியளவில் பன்னுக்கொட்டாய் அருகே கொடுவாளில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்துப்பார்த்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடதுபக்க முழங்கை முட்டியில் 8X4X3 cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.
2. தலையின் பின்பகுதியில் 3X1X1 cm அளவில் தையல் போடப்பட்ட ஒரு காயம் காணப்பட்டது.

உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் போது மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் தன்னிச்சையாக மருத்துவமனையை விட்டு வெளியேறியதால் மேற்படி காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என சான்று வழங்கியுள்ளார். **ராஜீவ்காந்திக்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே நாள் மதியம் 01.00 மணியளவில் 62 வயது மதிக்கத்தக்க முருகன், த/பெ. வெங்கடசாமி என்பவர் சிகிச்சைக்காக வந்தவரை விசாரித்தபோது தெரிந்த இரண்டு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.09 18:20:09 +0530

நபர்களாலும் அதே நாளன்று 11.00 மணியளவில் பன்னுக்கொட்டாய் அருகே அரிவாள் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்துப்பார்த்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. முன்கையில் 3X1 செ.மீ அளவில் தையல் போடப்பட்ட ஒரு காயம் காணப்பட்டது.
2. வலதுபக்க தோள் செப்பையில் தொடுவலி காணப்பட்டது.

உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு மேற்கண்ட காயங்கள் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். **முருகனுக்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ராஜிவ்காந்தி மருத்துவ சிகிச்சையின் போது மதுபோதையில் இருந்தாரா என பரிசோதித்து காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவர் மதுபோதையில் இருந்த காரணத்தினால் தான் சிகிச்சையில் இருந்து தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மதுபோதையில் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். முருகனுக்கு ஏற்பட்ட காயங்கள் எலும்பு முறிவு இல்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் வயது முதிர்வு காரணமாக தவறி கீழே விழுவதன் மூலம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் வழக்கிற்கு ஏற்றாற் போல் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.09 18:20:15 +0530

Judicial Magistrate,
Palacode.